**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.306/2024</u>**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் நாள் திங்கள்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தொழில் |
| த/பெ | ராமசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு காங்கேயம் தாலுக்கா படியூர் கிராமம் க.சா.எண். 394/2 நிலத்தில் 2 ஏக்கர் 6 சென்ட் நிலம் வா.சா.ஆ .1ன் படி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி சொத்தை கிரயம் பெற்றபோது அதை அளந்து பார்த்து கிரயம் பெறவில்லை என்றாலும் முன் ஆவணங்களை பார்வையிட்டு தான் கிரயம் பெற்றேன் என்றாலும் சரியல்ல. கிரையம் செய்தபோது மேற்படி சொத்தை அளந்து பார்த்து தான் வாங்கினேன் என்ற விபரத்தை என்னுடைய வழக்குரையிலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்துகளில் குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு 1-ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் என்னுடன் சேர்ந்து கார்த்திக் குமார் என்பவர் கிரையம் கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கார்த்திக்குமாருக்கு தாவா சொத்தில் எவ்வளவு பாத்தியம் என்பது குறித்தும் அவருக்கு மேற்படி சொத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்பதையும் நான் என்னுடைய வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. என்னிடம் மேற்படி சொத்தை கிரயம் பெற்ற 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு அதை கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். 2–ம் பிரதிவாதி அவ்வாறு கிரையம் பெற்ற ஒரு ஏக்கர் நிலத்தில் 4248.5 சதுர அடி நிலத்தை 3–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4248.5 சதுர அடி நிலத்தை தற்போது 9–வது பிரதிவாதி கிரையம் பெற்று அவரது அனுபவத்தில் வைத்து இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். 2–ம் பிரதிவாதியின் நிலத்திற்கு மேல் புறமாக 50 சென்ட் நிலத்தை இந்த வழக்கின் 4–ம் பிரதிவாதிக்கு நான் கிரையம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் நான் நிறுத்திக்கொண்ட பூமிக்கு மேற்கு என்பதற்கு பதிலாக இரண்டாம் பிரதிவாதியின் பூமிக்கு மேற்கு என தவறுதலாக அது பதிவாகிவிட்டது. அவ்வாறு தவறுதலாக பதிவாகவில்லை என்றாலும் நான் வழக்குக்காக தவறுதலாக பதிவாகிவிட்டதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. 4–ம் பிரதிவாதிக்கு நான் கிரயம் கொடுத்த பூமியை இவ்வழக்கின் 6, 7 பிரதிவாதிகள் கிரயம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 6 7 பிரதிவாதிகளிடம் இருந்து 8–வது பிரதிவாதியான உத்தமி மேற்படி சொத்தில் குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு கிரயம் பெற்று தன்னுடைய அனுபவத்தில் வைத்து இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். 8–ம் பிரதிவாதி மேற்படி பூமியை ரிசர்வே எண்.394/2B என உட்பிரிவு செய்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் 4–ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையத்தின் அடிப்படையில் அதை 6,7 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அதன் பிறகு 8–ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் நான் 4–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த போது செய்த தவறு மீண்டும் 6,7 பிரதிவாதிகளும் 8–ம் பதிவாதியும் கிரையம் செய்த போதும் தொடர்ந்து வந்துள்ளது. 8–ம் பிரதிவாதி கிரையம் செய்த சொத்துக்கு கிழப்புறமாக சண்முகசுந்தரம் என்பவர் நிலம் தான் அமைந்துள்ளது என்றாலும் என்னுடைய நிலம் அமையவில்லை என்றாலும் என்னுடைய நிலம் இருப்பதாக

நான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

4. நான் மேற்படி இடத்தில் எந்த நிலமும் இல்லாததால் தான் அனைத்து ஆவணங்களிலும் சண்முகசுந்தரம் நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டு ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்படி சொத்துக்களை பொதுவில் கிரையம் பெறவில்லை என்றாலும் குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு தான் கிரையம் பெற்றேன் என்றாலும் சரிதான். மேற்படி சொத்தை நான் கிரையம் செய்த போதும் பொதுவில் கிரையம் செய்யாமல் குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு தான் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடமிருந்து 1–ம் பிரதிவாதி குறிப்பிட செக்குபந்தி கண்டு தான் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதியிடமிருந்து 2ம் பிரதிவாதியும் குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு தான் கிரையம் பெற்று உள்ளார் என்றால் சரிதான். நானும் சண்முகசுந்தரமும் இணைந்து யாரிடமும் தாவா சொத்துக்களை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். மேற்படி சண்முகசுந்தரத்திற்கும் எனக்கும் தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்களில் எனக்கு கூட்டு உரிமை எதுவும் இல்லை என்பதால் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

5. தாவாவில் தாவாச் சொத்துக்களை நான் தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் பாக வழக்கு தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.10ல் குறிப்பிட்டுள்ள 1, 2, 5, 6, 7 நபர்களுக்கு தற்போது தாவா சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் உள்ள சண்முகசுந்தரம் என்பவருக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். பாத்தியமில்லாத 1, 2, 5, 6, 7 நபர்கள் பெயர்கள் ஆவணத்தில் சேர்க்கப்பட்டது போல மேற்படி சொத்தில் பாத்தியம் இல்லாத என்னுடைய பெயரும் தவறுதலாக மேற்படி ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறை ஆவணமான சிட்டாவில் பெயர் இருப்பதை அடிப்படையாகக் கொண்டு நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வருவாய்த் துறையினரிடம் பெயர் மாற்றம் கூறி தாக்கம் செய்த விண்ணப்பத்தையோ அதற்கு வருவாய் துறையினர் வழங்கிய உத்தரவை நகலையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் பெயர் மாற்றம் கோரி எந்த விண்ணப்பத்தையும் கொடுக்கவில்லை என்றாலும் வருவாய் துறை ஆவணத்தில் என்னுடைய பெயர் தவறுதலாக சேர்க்கப்பட்டுள்ள அடிப்படையில் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்தில் எனக்கு உண்மையிலே பாத்தியம் இருக்குமானால் அதை நிரூபிப்பதற்கு இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்து அறிக்கை பெற்றிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதிக்கு நான் விற்பனை செய்த விஸ்தீரனத்தை விட அதிக விஸ்தீரணம் பதிவாகியிருப்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய்த்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 2-ம் பிரதிவாதி தான் கிரயம் பெற்ற சொத்துக்களை அத்து பிரித்து கம்பி வேலி அமைத்து தன்னுடைய சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் அதில் எனக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனக்கு பாகம் கொடுப்பதற்கு இரண்டாம் பிரதிவாதிக்கு எந்தவிதமான சட்ட கடப்பாடும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆறு மற்றும் ஏழு பிரதிவாதிகள் கிரையம் பெறும் போது முன் ஆவணங்கள், நாற்புர எல்லைகள், விஸ்தீரணம் ஆகியவற்றை ஊர்ஜிதம் செய்து கொண்டுதான் கிரையம் பெற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சண்முகசுந்தரம் நிலத்திற்கு மேற்கு என உண்மையான செக்குபந்தி கண்டு சொத்து விவரத்தை குறிப்பிட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிட்டது போல 4, 6, 7 மற்றும் 8 பிரதிவாதிகளின் கிரைய ஆவணத்தில் தட்டச்சு பிழை எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மறைமுாக பிரதிவாதிகளின் சொத்தை

அடைவதற்காக தட்டச்சு பிழை ஏற்பட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்து சொன்னால் சரியல்ல.

7. தாவா சொத்து கிரையத்தில் ஏதேனும் பிழை இருந்தாலும் அது என்னுடைய உரிமை மூலத்தை எந்த வகையிலும் பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாகபாத்தியம் உள்ளதா என்பதை இன்னும் முடிவாகத சூழ்நிலையில் நான் கோரிய விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 6, 7, 8 பிரதிவாதிகள் பெற்ற பத்திரத்தில் நான் தரப்பினர் இல்லாததால் அதை பொருத்து நான் கோரிய விளம்பகை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் அசலை தாக்கல் செய்ய முடியுமா என்பதை நான் பார்க்க வேண்டும். என்னிடம் வேறு எந்த நிலமும் இல்லாததால் என்னிடம் கிரையம் பெற்ற நபர்களிடம் அசல் ஆவணத்தை ஒப்படைத்து விட்டதால் தான் நான் நீதிமன்றத்தில் அதை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு கோரிக்கை நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கு விரோதமாக உள்ளது என்பதால் நான் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல

**8–ம் பிரதிவாதி மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.11.18 19:16:29 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.